சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **114 / 2020**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி..A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **07.04.2026**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் : | சூர்யா | கிராமம் : |
| த/பெ : | செந்தில் | வட்டம் : |
| மதம் : | | தொழில்: |
| ஜாதி : | | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. முதல் தகவலறிக்கை கணினி நகல் - ம.சா.ஆ 1
2. டிஸ்ஜார்ஜ் சம்மரி - ம.சா.ஆ 2
3. மருத்துவ பில்கள் - ம.சா.ஆ 3
4. காயங்களின் புகைப்படங்கள் - ம.சா.ஆ 4
5. X-Ray - 2 - ம.சா.ஆ 5. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விபத்து சமயத்தில் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் எனது மாமாவிற்கு சொந்தமானது. மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் மனுவானது குறைபாடு உடையது என்றாலும், அந்த வகையில் மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு 16 வயதாகும், மேற்படி 16 வயது உடைய ஒரு நபர் வாகனத்தை ஓட்டுவதற்கு தகுதியற்றவர் என்றால் சரிதான். மேற்படி எனக்கு விபத்து சமயத்தில் 16 வயது என்றால் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்தானது சாலையின் மைய பகுதியில் நடைபெற்றதா என்றால் சாலையின் ஓரத்தில் நடைபெற்றது. நான் தான் வாகனத்தை ஓட்டத்தெரியாமல் ஓட்டி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் நான் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படித்துக்கொண்டிருந்தேன். தற்பொழுது வீட்டில் தான் இருந்து வருகிறேன். நான் படித்து முடித்துவிட்டு தனியார் நிறுவனத்தில் வேலை செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனையில் இருந்து விடுவிப்பு செய்யும்பொழுது நல்ல நிலைமையில் தான்

விடுவிப்பு செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வாகனத்தில் தீ பிடித்து, எனக்கு தீ காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் நான் வேகமாக வாகனத்தை இயக்கியதால் தான் தீ காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு காயம் ஏற்பட்ட காரணத்தினால் எனக்கு ஏதேனும் இழப்பீடு கிடைக்கவேண்டும் என்றால் தவறுதலாக முதல் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது போலீசார் தவறுதலாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியாமல் வாகனத்தை இயக்கிய காரணத்தினால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் என்னால் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிகஅதிகமானது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இரண்டாவது எதிர்மனுதாரரை பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்தானது சாலையின் மையபகுதியில் ஏற்பட்டதால் தான் போலீசார் வரைந்த மாதிரி வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN

சார்பு நீதிபதி

குளித்தலை.